நாள் 04.03.2026

CC 440/2021

புசா 1

பெயர் -பிரகாஷ்

த/பெ- பெருமாள்

வயது 39

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>எதிர தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

1, நான் 2013 ம் ஆண்டு முதல் அந்தோனி அரவிந்த் என்ற வழக்கறிஞரிடம் குமாஸ்தாவாக பணிபுரிந்தேன் என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் உத்தரவிடும பட்சத்தில் அந்தோணி அரவிந்த் வழக்கறிஞரின் லெட்டர் பேடில் நான் பணி செய்து வந்தேன் என்பதை எழுதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். உண்மையிலேயே நான் 10 வருடம் குமாஸ்தாவாக பணி புரிந்திருந்தால் கோவை மாவட்ட வழக்கறிஞர் குமாஸ்தா சங்கதில் நான் என்னை பதிவு செய்துகொண்டிருப்பேன் என்றும் அவ்வாறு நான் செய்யாததால் நான் கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. கடந்த 2010 முதல் 2013 வரை நான் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வந்தேன் ஆனால் சட்டப்படிப்பை முடிக்கவில்லை அதனால் நான் குமாஸ்தாகவாக பதிவு செய்யவில்லை.

2. இதற்கு முன் இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையின்போது நான் நிறைய நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்ற கேள்விக்கு சரிதான் என்று கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. எந்த நபருக்கும் நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. என்னுடைய சாட்சியத்தில் பூர்வீக சொத்தை விற்று அதில் வந்த பணத்தை எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்று கூறியுள்ளேன், யாருக்கு எவ்வளவு தொகைக்கு பூர்வீக சொத்தை விற்பனை செய்தேன் என்றால் அனைத்து விபரங்களும் விற்பனை ஆவணத்தில் அடங்கியுள்ளது, நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்கிறேன். உண்மையில் பூர்வீக சொத்தை விற்று எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் அதனை எனது புகாரில் தெரிவித்திருப்பேன் என்றும் ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு நான் செய்யாததால் நான் கூறும் சங்கதி நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல.

3. பூர்வீக சொத்து யார் யாருக்கு பாத்தியப்பட்டது, யாரெல்லாம் சேர்ந்து அந்த சொத்தை விற்பனை செய்தார்கள் என்றால் என்னுடைய தாத்தா காலத்திற்கு பிறகு அந்த சொத்து எங்கள் குடும்பத்திற்கு

பாத்தியபட்டது. நான், என்னுடைய தாத்தா, என்னுடைய தந்தை மற்றும் எனது சகோதரி ஆகியோர் அந்த சொத்தை விற்பனை செய்தோம். என்னுடைய தாத்தா, தந்தை மற்றும் சகோதரியின் பெயர் என்ன என்றால் தாத்தாவின் பெயர் ஆறுச்சாமி, தந்தை பெயர் பெருமாள், சகோதரி பெயர் மல்லிகா ஆகும். எந்த இடத்தில் இருந்து பூர்வீக சொத்தை நாங்கள் விற்று எதிரிக்கு பணம் கொடுத்தோம் என்றால் சொலவம்பாளையம்கிராமல் உள்ள பூர்வீக சொத்தை விற்று எதிரிக்கு பணம் கொடுத்தேன்.

4. 2013 ம் வருடம் வரை வழக்கறிஞரிடம் குமாஸ்தாவாக மட்டுமே பணிபுரிந்து வந்தேன் என்றல் அதனுடன் சேர்த்து விவசாயமும் செய்து வந்தேன். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுண்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்வதற்கு தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் விவசாயம் செய்து வருகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பூர்வீக சொத்து உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன். கடந்த 2019 - 2020 ம் ஆண்டு வரை என்னுடைய மாத வருமானம் ரூபாய் 10 அயிரம் என்று என்னுடைய சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் மேலும் வருமானவரியும் தாக்கல் செய்துள்ளேன் என்று கூறியுள்ளேன் அப்படியிருக்கையில் வருமானவரியில் வருடாந்திர வருமானம் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, வருமான வரி தாக்கல் செய்த ஆவணத்தை பார்த்தால்தான் கூறமுடியும்.

5. எதிரி என்னிடம் கடனுறுதி சீட்டு கொடுத்து கடன் வாங்கிசென்றார் என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் யார் அந்த கடனுறுதி சீட்டை நிரப்பினார்கள் அதில் யார் சாட்சி கையொப்பமிட்டார்கள் என்ற சங்கதிகள் வழக்கு ஆவணங்களான வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மறறும் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரி எனக்கு எந்த கடனுறுதி சீட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் கடனுறுதி சீட்டு சம்மந்தப்பட்ட தகவல்களை என்னால் கூற இயலவில்லை என்றால் சரியல்ல.

6. எதிரிக்கு ரூபாய் 4 லட்சம் கடன் கொடுப்பதற்கு போதுமான ஆதாரம் மற்றும் வசதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல. புகாரில் எதிரி 2 மாத வட்டி மட்டும் கொடுத்தார் என்று மட்டுமே கூறியுள்ளேன், எவ்வளவு வட்டித் தொகை என்று குறிப்பிட்டு நான் கூறாததால் அந்த சங்கதி நம்பத்தகுந்ததாக இல்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த வட்டித்தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 9976575120 என்ற கைபேசி எண் யாருடையது என்றால் என்னுடைய கைபேசி எண்தான். 9843253410 மற்றும் 9790531301 என்ற கைபேசி எண்கள் சுந்தரம் என்ற நபரின் கைபேசி எண் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. உண்மையிலேயே நான் எதிரிக்கு பணம் கடன் கொடுத்திருந்தால் ஆதாரமாக ஆவணம் அவரிடம் இருந்த நான் பெற்றிருப்பேன் என்றும் என்னுடைய பணம் கொடுப்பதற்கான ஆதார இருப்பை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு எந்த செயலும் நான் செய்யாததால் என்னுடைய வழக்கு நம்ப தகுந்ததாக இல்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு நேரடியாக பழக்கமில்லை என்பதால் அவருக்கு நான் பெருந்தொகையாக ரூபாய் 4 லட்சம் கடன் கொடுத்தேன் என்று கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல.

8. சுந்தரம் என்ற நபர் என்னுடைய நெருங்கிய நண்பர் என்றும் என்னுடைய கைபேசி எண்ணில் இருந்து அவருக்கு பலமுறை நான் தொடர்புகொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலே எதிரி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றும் காசோலை கொடுக்கவில்லை என்றும் சுந்தரம் என்ற நபரிடம் கொடுத்த காசோலையை எதிரியிடமிருந்து பணம் பறிக்கவேண்டும என்ற எண்ணத்தில் அந்த காசோலைய வைத்து எதிரி மீது பொய்யான புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி சுந்தரம் என்ற நபருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்து தீர்த்து விட்டபடியாலும் அவரிடம் வாங்கிய கடனைப் பற்றி அவரிடம் பேசிவிட்டபடியாலும் என்னுடைய வழககறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால சுந்தரம் என்ற நபர் யார் என்றே எனக்கு தெரியாது. அவர் கூறுவது பொய்யான சங்கதியாகும்.

9. மேலும் வழக்கு காசோலையை நான் வங்கியில் செலுத்தும்போது எதிரியின் வங்கி கணக்கு முடிக்கப்பட்டு இருந்தது என்ற காரணத்தால் அவர் பதில் அறிவிப்பு எதுவும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கோவை நீதிமன்றத்தில் அந்தோணி என்ற நபர் எதிரியின் கணவரை நொடிப்பு நிலை அடைந்தவர் என்று விளம்புவதற்கு மனு தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த மனுவில் காசோலை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதால் என்னை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளார்கள் என்றால் அந்த மனு சம்மந்தமாக இதுவரை எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை. அதனால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

10. முதலில் பல நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் வழக்கம் உள்ளது என்று கூறிவிட்டு மீண்டும அதை மாற்றி நான் யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை என்று முன்னுக்குபின் முரணாக கூறுவதால் என்னுடைய வழக்கு நம்பத் தகுந்ததாக இல்லை என்றால் சரியல்ல. சுந்தரம் என்ற நபரை எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக அவரை தெரியாது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் மட்டுமல்ல எதிரியின்

**கணவருக்கும் எனக்கும் கூட எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த பணமும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.